FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

Under section 173 BNSS

C 8167280

1. District : கடலூர் மாவட்டம் | PS: ஊத.க. பிரிவு காவல்நிலையம் | Year: 2025 ஆண்டு | FIR No.: 12/2025 மு.த.அ. எண் | Date: 05.12.2025 நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act | Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: 1988 as amended by The Prevention of | Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Corruption (Amendment) Act 2018 | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from நாள் முதல் 03.12.2025 | Date to : நாள் வரை
Time Period : நேர அளவு | Time from நேரம் முதல் 12.00 hrs | Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05.12.2025 | Time நேரம் 07.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - III | Time நேரம் 07.30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — கணினி தட்டச்சு புகார் மனு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 65 கி.மீ. தென்மேற்கு.
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி — வட்டாட்சியர் அலுவலகம், விருத்தாசலம்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — R.நேரு
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம் — இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — 46
Place of Issue : வழங்கப்பட்ட இடம் — ——
(f) Occupation : தொழில் — நடத்துநர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், விருத்தாசலம்
(g) Address : முகவரி — தோப்புத் தெரு, க.தொழூர் திருமுட்டம் தாலுக்கா, கடலூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

ராஜ்குமார், உதவியாளர், வட்டாட்சியர் அலுவலகம், விருத்தாசலம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
விவசாய வேலை காரணமாக தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>

நான் இன்று 05.12.2025 ஆம் தேதி காலை 07.30 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, நிலையம் ஆஜரான கடலூர் மாவட்டம், திருமுட்டம் தாலுக்கா, க.தொழுர், தோப்புத் தெரு என்ற முகவரியைச் சேர்ந்த R.நேரு, த/பெ. ராமசாமி என்பவர், தட்டச்சு புகார் மனு ஒன்றினை என்னிடம் கொடுத்தார். அந்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு : அனுப்புநர் R.நேரு வயது 46, த/பெ ராமசாமி, தோப்புத் தெரு, க.தொழுர், திருமுட்டம் தாலுக்கா, கடலூர். மாவட்டம். செல் : 9486911571. பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை, கடலூர். அய்யா,

(தொடர்ச்சி பக்கம்–3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R. Nehru
5.12.2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

S.SUNDARAJ

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் .....
Rank: நிலை Inspector of police No. எண் .....
VAC, Cuddalore

நான் கடலூர் மாவட்டம், திருமுட்டம் தாலுக்கா, தொழுர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், விருத்தாசலம் பணிமனை –I ல் நடத்துநராக பணிபுரிந்து வருகிறேன். என்து மாமனார் நாகராஜனின் தகப்பனார் சாமித்துரை என்பவர் 22.12.1959 அன்று கம்மாபுரம் சார்பதிவக ஆவண எண்.2391–ன்படி கோட்டுமுளை கிராம புல எண்.34/6 – 0.75–ல் மேல்புறம் 08.¾ சென்ட் நிலமும், 30.11.1974 அன்று கம்மாபுரம் சார்பதிவக ஆவண எண்.1944–ன்படி கோட்டுமுளை கிராம புல எண்.34/6 0.75–ல் மேல்புறம் 0.6–ல் மேல்புலம் 0.3 செண்ட் நிலமும், ஆக மொத்தம் 11.¾ சென்ட் நிலம் கிரையம் பெற்று அனுபவித்து வந்துள்ளார். அதன் பின்னர் மேற்படி நிலத்தை எனது மாமனார் மற்றும் அவரது சகோதரர் கிருஷ்ணமூர்த்தியின் வாரிசுகள் அனுபவித்து வருகிறார்கள். ஆனால் கிராம புல வரைபடத்தில் 7.¾ சென்ட்தான் உங்களுக்கு உள்ளது என்று கிராம நிர்வாக அலுவலர் தெரிவித்ததாகவும் அதனை வருவாய்த்துறை வரைபடத்தில் திருத்த வேண்டும் என்றும் எனது மாமனார் என்னிடம் சொன்னார். மேலும் எனது மாமனாரின் தகப்பனார் சாமித்துரை அவரது பெயரில் இருந்த கோட்டுமுளை கிராம புல எண்.38/3 – 0.13 சென்டில் 4.½ சென்ட் இடத்தை அதே ஊரைச் சேர்ந்த சங்கரன் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார். சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மேற்படி சர்வே எண். 38/3 – 0.13 சென்டில் எனது மாமனாருக்கு சொந்தமான மீதமுள்ள 8.½ சென்ட் நிலத்தையும் சேர்த்து மொத்தம் 13 சென்ட் நிலத்திற்கான பட்டா சங்கரன் என்பவர் பெயருக்கு மாறியுள்ளது. எனவே அந்த பட்டாவில் உள்ள பெயரை திருத்தம் செய்யவும் எனது மாமனாரின் தகப்பனார் பெயரில் உள்ள இடத்தினை பரப்பு திருத்தம் செய்வதற்காகவும், கடந்த 29.05.2024 ஆம் தேதி விருத்தாசலம் வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் மனு அளித்திருந்தார். மேற்படி மனு சம்மந்தமாக எனது மாமனார் வருவாய் அலுவலகங்களுக்கு செல்ல முடியாத நிலையில் என்னிடம் மேற்படி வேலையை முடித்து தருமாறு சொன்னார். அதன்பின்னர் நான் வருவாய் கோட்டாட்சியர் அவர்களை நேரில் சந்தித்து எனது மாமனார் மனு சம்மந்தமாக கேட்டேன். அப்போது வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் விருத்தாசலம் வருவாய்

5/12/25

வட்டாட்சியரின் அறிக்கை கோரப்பட்டுள்ளதாகவும் அறிக்கை பெறப்பட்ட பின்னர் உத்தரவு வழங்குவதாக கூறினார். அதன்பின்னர் கோட்டிமுளை கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர் மற்றும் சர்வேயர் ஆகியோர்கள் மேற்படி சர்வே எண்ணிற்கான இடங்களை நேரில் வந்து பார்வையிட்டு கள ஆய்வு செய்து அறிக்கையை விருத்தாசலம் வருவாய் வட்டாட்சியருக்கு அனுப்பினார்கள். அதன் பின்னர் வருவாய் வட்டாட்சியர் அவர்கள் மேற்படி மனு சம்மந்தமாக எனது மாமனாரை இரண்டு முறை அழைத்து விசாரித்தார். அப்போது அவருடன் நானும் விருத்தாசலம் தாலுக்கா அலுவலகம் சென்றேன். அதன்பின்னர் நான் கடந்த வாரம் விருத்தாசலம் தாலுக்கா அலுவலகம் சென்று வருவாய் வட்டாட்சியர் அவர்களை சந்தித்து எனது மாமனாரின் மனு சம்மந்தமாக கேட்டபோது, வருவாய் வட்டாட்சியர் அவரது விசாரணை அறிக்கையை விரைவில் கோட்டாட்சியருக்கு அனுப்பி வைப்பதாக சொல்லி அவரது அலுவலகத்தில் இருந்த உதவியாளர் ராஜ்குமார் என்பவரை அழைத்து அறிக்கையை தயார் செய்யும்படி சொன்னார். அதன்பின்னர் நான் 03.12.2025 ஆம் தேதி பகல் சுமார் 12.00 மணியளவில் விருத்தாசலம் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் சென்று அலுவலகத்தில் இருந்த உதவியாளர் ராஜ்குமார் என்பவரை சந்தித்து வட்டாட்சியர் அவர்களின் அறிக்கை சம்மந்தமாக கேட்டேன். அப்போது உதவியாளர் ராஜ்குமார் என்னிடம் "ஆடர் ரெடி பண்ணுவது சாதாரண வேல இல்ல, 'எலக்ஷன் வேலை நடந்துக்கிட்டு இருக்கு, அதனால இருபதாயிரம் ரூபாய் கொண்டு வந்து கொடு இரண்டு நாட்களில் ஆடரில் கையெழுத்து வாங்கி தருகிறேன்" என்று சொன்னார். அதற்கு நான் அவ்வளவு பணம் என்னிடம் இல்லை என்று சொன்னேன். அதற்கு ராஜ்குமார் "ரெண்டு சர்வே நம்பரை மாத்தணும் அதனால ஒரு பதினைந்தாயிரமாவது எடுத்துட்டு வந்து கொடு அதுக்கு மேல எல்லாம் குறைக்க முடியாது" என்று கராராக சொன்னார். நான் வீட்டிற்கு சென்று எனது மாமனாரிடம் கலந்து பேசிவிட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். அதன் பின்னர் நான் வீட்டிற்கு வந்து எனது மாமனாரிடம் உதவியாளர் ராஜ்குமார் பதிணைந்தாயிரம் லஞ்சம் கேட்ட விபரத்தை சொன்னேன். அதற்கு எனது மாமனார் லஞ்சம் கொடுத்து பரப்பு திருத்தம் மற்றும்

5/12/25

பட்டா மாற்றம் செய்ய எனக்கு விருப்பம் இல்லை என்றும் இதுதொடர்பாக கடலூர் லஞ்ச ஒழிப்பு துறையில் என்னையே புகார் கொடுக்க சொன்னார். எனது நிலத்தில் வேலை இருந்த காரணத்தினால் என்னால் உடனடியாக வந்து புகார் கொடுக்க முடியவில்லை. எனவே இன்று 05.12.2025 ஆம் தேதி எனது மாமனாரின் நிலத்தினை பரப்பு திருத்தம் மற்றும் பட்டா பெயர் மாற்றம் செய்ய விருத்தாசலம் வருவாய் வட்டாட்சியர் அவர்களின் உத்தரவு பெற்றுத்தர என்னிடம் ரூ.15,000/– லஞ்சம் கேட்ட விருத்தாசலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் உதவியாளர் ராஜ்குமார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் மனுவினை கொடுக்கிறேன். ராஜ்குமார் கேட்ட லஞ்ச பணம் ரூ.15,000/–த்தை கொண்டு வந்துள்ளேன். இப்படிக்கு ஒப்பம் ----- 5.12.2025

Hon'ble Madam
Submitted,

Received the above Computer typed complaint on 05.12.2025 at about 07.30 hrs., a quiet and quick verification was made on the genuineness of the complaint through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Hence, I registered a case in Cuddalore Vigilance and Anti-Corruption in Cr.No.12/2025, U/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 05.12.2025 at 08.30 hrs., sd/–xxxxx 5/12/2025 Inspector of Police, VAC, Cuddalore.

5/12/2025

[S. SUNDRARAJ]
Inspector of Police
VAC, Cuddalore